අධ්‍යාපන අමාත්‍යාංශය
கல்வி அமைச்சு
Ministry of Education

'ඉසුරුපාය', බත්තරමුල්ල, ශ්‍රී ලංකාව.
'இசுருபாய', பத்தரமுல்ல, இலங்கை.
'Isurupaya', Battaramulla, Sri Lanka.
+94112785141-50 +94112784846
isurupaya@moe.gov.lk www.moe.gov.lk

මගේ යොමුව / எனது இல. / My Ref. ED/05/67/28/6 II වෙළුම

ඔබේ යොමුව / உமது இல. / Your Ref.

දිනය / திகதி / Date 2022.07.11

சகல வலயக் கல்விப் பணிப்பாளர்கள்,
தேசிய பாடசாலை அதிபர்கள்,
கல்வியியற் கல்லூரி பீடாதிபதிகள்,
ஆசிரிய அதிபர்கள்,
ஆசிரிய நிலைய முகாமையாளர்கள்,

**முதன்மை தொழில்நுட்பம் அல்லாத பணியாளர் வகை (டு-ஐ)இ முதன்மை அரை தொழில்நுட்ப பணியாளர் வகை(டு-2) மற்றும் முதன்மை தொழில்நுட்ப பணியாளர்கள் (டு3) வினைத்திறன் தடைதாண்டல் பரீட்சைக்கான விண்ணப்பங்களுக்கு அழைப்பு விடுத்தல் 2022 ஆகஸ்ட் 01 ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது**

மேற்படி விடயம் தொடர்பான எனது சம இலக்கம் மற்றும் 2022.06.16 ஆம் திகதிய கடிதத்திற்கு மேலதிகமாக

02. அதன் பிரகாரம் நாட்டில் தற்போது நிலவும் நிலவரத்தை கருத்திற் கொண்டு மேற்படி வினைத்திறன் தடைதாண்டல் பரீட்சை தொடர்பில் விண்ணப்பங்கள் அனுப்பப்படும் இறுதித் திகதியினை 2022 ஆகஸ்ட் மாதம் 01 ஆம் திகதி வரையில் நீடிக்கப்பட்டிருப்பதை தயவுடன் அறியத்தருகின்றேன்.

03. தற்போது நிலவும் போக்குவரத்து சிரமங்களை கருத்திற் கொண்டு இந்த பரீட்சை நடைபெறும் காலம் தொடர்பாக மேலும் அறியத்தருவதுடன், அமைச்சு வலைத்தளத்தில் வெளியிடப்படும் அறிவித்தல் குறித்து விசேட கவனம் செலுத்துமாறு விண்ணப்பதாரிகளை அறிவுறுத்தும்படி கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

04. மேலும், ஏற்கனவே தபால் மூலம் முன்னிலைப்படுத்தப்பட்ட, 2021 ஆம் ஆண்டில் நடாத்தப்பட்ட முதன்மை தொழில்நுட்பம் அல்லாத பணியாளர் வகை, முதன்மை அரை தொழில்நுட்ப பணியாளர் வகை மற்றும் முதன்மை தொழில்நுட்ப பணியாளர்கள் வினைத்திறன் தடைதாண்டல் பரீட்சைக்குறிய பெறுபேறு ஆவணத்தை தங்களின் கவனத்திற்காக அமைச்சின் உத்தியோகபூர்வ வலைத்தளத்தில் வெளியிடப்பட்டுள்ளது என்பதனை மேலும் அறியத்தருகின்றேன்.

ஆர்.பீ. கங்கேவல
மேலதிக செயலாளர் (கல்விசாரா மற்றும் ஒருங்கிணைப்பு அல்லாத)
செயலாளருக்காக